03.11.2025 வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி. (ஒ.எஸ்.எண்.240 /2015 ) திரு.கோமதி.

2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி -

1) வா.சா.ஆ.7 நயினார் யார் யார்மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் என்மீதும், எனது அண்ணன் மீதும் போட்டுள்ள வழக்கின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை வா.சா.ஆ.6 மற்றும் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.6,7 தீர்ப்பில் வழக்கின் சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்படவில்லை. வா.சா.ஆ.6,7 தீர்ப்பில் தென்வடல் நீளம் 40 அடி சொல்லப்பட்டுள்ளது எனது வீட்டின் தென்வடல் அளவு 32 அடி என்று எனது பிராதில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா-ஆ.3 தீர்வை ரசீதில் கதவு எண்.63 ஈ என்று குறிப்பிடப்பட்டள்ளது என்றால் சரிதான். எனது வீட்டின் கதவு எண்.63 ஈ தான். வா.சா.ஆ.6,7 ஆவணத்திற்கும் வா.சா.ஆ.3 ஆவணத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் வா.சா.ஆ.6,7 ஆவணங்களுக்கும் தாவாச்சொத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 க்கும் தபசில் சொத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எனது அண்ணனை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் மேற்படி வழக்குகளை எனது அண்ணன் தான் நடத்தினார். எனது அண்ணனை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மூலப்பத்திரங்களுக்கும் வா.சா.ஆ.1,2 இந்த வழக்கில் தாவாச்சொத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. இந்த சொத்தில் அத்துமீறிய ஆக்கிரமிப்பாளர் என்றால் சரியல்ல. எனது வீடு அதன் அளவுகள் அதற்கு கீழ்பக்கம் உள்ள காலிமனை ஆகியவற்றிற்கும் தபசில் சொத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. என்வீட்டிற்கு கீழ்புறம் காலிமனை எதுவும் இல்லை, பண்டாரம் என்பவரின் வீடு தான் உள்ளது. மேற்படி பண்டாரம் வீட்டின் மேல்பக்க சுவரும், எனது வீட்டின் கீழ்பக்கச்சுவரும் பொதுச்சுவராகும். தாவாச்சொத்துக்கும் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கும் தொடர்பில்லாததால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
03.11.2025.